# சுட்டு

25 காசு

மாத இதழ்

5

15—6—81




''என்னப்பா! உன் கழுதையா இது! ரேஸ் குதிரை மாதிரி 'தளதள' ன்னு இருக்கே?''.

''இப்ப ஏகப்பட்ட கமிஷன்கள் நடக்குதே! நம்ம கழுதைக்கு நல்ல தீவனங்க! இன்னும் நாலு வாங்கணும்''.

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

*With best compliments from:-*

Phone : 444491

# Chellam Marketing & Consultancy Pvt. Ltd.,

**132, Usman Road,**
**MADRAS-600 017.**




**மது அரக்கனை எதிர்த்து நிற்கும் மாண்புமிகு தமிழக முதல்வரே வாழ்க!''**

எம் ஜி. ஆர். ஆட்சிக்கு வந்த சமயத்தில் வைத்த சினிமா பாஸ்டர் இது. இன்னும் தொடர்ந்து சென்னை, அண்ணாசாலை, யிரம் விளக்கில் அனைவர் கவனத்தையும் கவர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தப் படத்தில் 'புரட்சித் தலைவர்' மது அரக்கனை எதிர்க்-றாரா அல்லது புறமுதுகு காட்டதயாராகிறாரா அல்லது தாய்க் லம் கண்ணீர் வடிப்பதைக் கண்டு ஒதுங்குகிறாரா என்பது ழப்பமூட்டுகிறதே.! மதுக்கடைகளை, ஊரெங்கும் ஏலம் ட்டதன் மூலம் அவரே தனது முகமுடியைக் கிழித்துக் கொண் ருக்கும் நிலையிலும் இப்போஸ்டர் தொடர வேண்டுமா?.

தகவல்:— **கா. சீ. ஸ்ரீதரன்,** பம்மல்.

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# ஸ்ரீலங்காவில் நடப்பது?

''சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்''- பாரதி அன்று பாடி வைத்தார். நேச நெஞ்சம் அப்படி எண்ணியது. இன்றோ இந்தப் பார்வையற்ற நிலையைத்தான் பார்க்க முடிகிறது. இலங்கைத் தமிழர்களின் நிலையைப் புரிந்து கொள்ள சில சம்பவங்களின் பின்னணி தெரிய வேண்டியுள்ளது.

1958-ல் சிங்கள மொழி மட்டுமே 'ஆட்சி மொழி' என அறிக்கப்பட்டது தமிழர்கள் கொதித்தெழுந்தனர். ':தமிழ்ப் பகுதிகளில் அரசு நிர்வாகம் தமிழில் நடக்கும்; அப்பகுதி மக்களுக்கு வளர்ச்சித் திட்டங்களில் முன்னுரிமை கொடுக்கப்படும்'' என்ற முக்கிய அம்சம் கொண்ட உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாட்டைத் தற்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனே அன்று எதிர்த்துப் போராட்டம் நடத்தியுள்ளார். பின்னர் அரசியலில் செல்வாக்கு பெற்றிருந்த புத்த சாமியார்களின் மதத்திமிருக்கு கூட்டாளியானார் பிரதமர். இதன் விளைவு, அந்த உடன்பாடு வெகு வேகமாகக் கைகழுவப்பட்டது.

1961ல் தமிழர்களது இடைவிடாத எதிர்ப்பால் தமிழ் ஓரளவு அங்கீகரிக்கப்பட்டது. சிறுபான்மை தேசீய இனப்பாதுகாப்புக்கானமுறைகளை வளர்ப்பதில் செல்வாக்கிலிருந்த கட்சிகள் தலைகாட்டவே இல்லை. தொடர்ந்து மோதல்கள் மாமூலாயின.

1971ல் 'மக்கள் புரட்சி கட்சி' ஆயுதப் புரட்சிக்கான முயற்சிகளை எடுத்தது இதனை சீன, இந்திய அரசுகளின் உதவியோடு நசுக்கியது பண்டாரநாயகாவின் ஆட்சி ஆயிரத்துக்குமேல் இளைஞர்கள் அழிக்கப்பட்டனர்.


1972ல் ''தமிழ் ஈழம்'' அடையப்போவதாக ஐக்கிய தமிழ் விடுதலை முன்னணி ஏற்படுத்தப்பட்டது. தமிழ் இன உணர்வை தீவிரப்படுத்தி இது செல்வாக்குப் பெற்றுள்ளது. இத்தோடு 'விடுதலைப் புலிகள்' என்ற இயக்கம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் தீவிரமாகியுள்ளது. விரக்தியிலும் வேதனையிலும் உள்ள இளைஞர்கள் இப்படித் தீவிரப் படுவதும் தவிர்க்க முடியாததுதான். ஆனால் இது நிஜப்போரல்ல, நிழல்போர்தான்.

சமீபத்தைய தேர்தலை மூன்று முக்கிய கட்சிகள் புறக்கணித்துள்ளன. ஆனாலும் தேர்தல் நடத்தப்பட்டிருக்கிறது. வீதியில் நின்ற தமிழ் இளைஞர்கள் சிலர் காக்காய் குருவியைப் போல் சுட்டுக் கொல்லபட்டிருக்கிறார்கள்.

தமிழ்ப் பகுதியில் தான் கலவரம் என்று சொல்லும் அரசு நாடு முழுவதும் நெருக்கடி நிலையைக் கொண்டுவர வேண்டிய அவசியம் என்ன?

நீதி கேட்டு நாட்டில் மக்கள் இயக்கங்கள் வளர்ந்துள்ளன அவற்றை ஜனநாயக முறையில் சந்திக்க தயாராயில்லாத அரசு மக்களது விடுதலை உணர்வை வேட்டையாட நெருக்கடி நிலை என்ற காட்டு மிருகத்தை அவிழ்த்து விட்டது. தற்போது மீண்டும் பழைய அரசியல் நாடகம் துவங்கியுள்ளது. மக்கள் மீது அங்கும் அரசியல் வாதிகள் மாறிமாறி சவாரி செய்கிறார்கள்.






FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# நமது வாசகர்கள்

- பல்கலைக் கழகத்தின் அவல நிலையை நாம் எழுதுவதால் மட்டும் காப்பாற்றி விட முடியுமா? பிரச்சனைகளை அலச ஆரம்பிக்கும் சுட்டி, பிரச்சனைகளுக்குத் தீர்வும் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

  *இரா. முரளி, 1, ராமானுஜம் தெரு, சென்னை-63.*

- சீரியசாகத்தான் விஷயங்களைச் சுட்டி அலசும் என்று நினைத்தேன். சிரிப்பாகவும் விஷயங்களை அலசத் தெரியும் என்பதை 'ரேஷனில் பாமாயில்' மூலம் தெரிந்து கொண்டேன். தொடரட்டும் இம்மாதிரி கட்டுரைகள்.

  *கே. கோபால் வடக்கு மாடவீதி, சென்னை-4.*

- வழக்கமான பத்திரிகைகளிலிருந்து மாறுபட்ட தோற்றத்தில் சுட்டியைக் கண்டேன். இருபத்தைந்து பைசாவுக்கு இருபத்தைந்து வயது வாலிபரின் சுறுசுறுப்பையும் சுட்டிதனத்தையும் உணர முடிகிறது. சுட்டியின் பணிக்கு ஒரு ஷொட்டு.

  *இரணியல் 'கலை', தெர்மல் நகர், தூத்துக்குடி-6.*

- சுட்டியின் 32 பக்கங்களையும் வரிவிடாது இடைவெளி கொடுக்காது தொடர்ந்து படித்து முடித்தேன். ஆர்ப்பாட்டமும் ஆரவாரமும் மிக்க இவ்வுலகில் இப்படி ஒரு பத்திரிகை வரக்கூடாதா என்று விரும்பியவர்களில் நானும் ஒருவன்.

  *ஹாஜி ஏ.எம். சமீது துணைத்தலைவர்,*
  *M.M.H. அரபுக்கல்லூரி, நீடூர்.*

- மே 15, 1981 இதழில் வெளி வந்த கோ-ஆப்டெக்ஸ் அம்பலம், பாமாயில் ஊழல், இந்தியாவின் சோஷலிசம், சபாஷ்! அத்தனையும் எனது அனுபவத்தில் 100க்கு 100 உண்மையானவை.

  *ஜி.வி. ராவ், பாங்க் ஆப் இந்தியா, சென்னை-1*

# விசாரணைக் கமிஷன்கள் சாதித்தவை?

விசாரணைக் கமிஷன் சட்டம் வந்த 1952லிருந்து இதுவரை 200க்கும் மேற்பட்ட கமிஷன்கள் போடப்பட்டுவிட்டன. இவை சாதித்தவை? தற்காலிகமாக சிலரின் அரசியல் வாழ்க்கை தேய்ந்ததுண்டு. நெஞ்சை வாட்டும் போலீஸ், சிறைக் கொடுமைகள் வெளிவந்ததுண்டு. சிலரின் இரகசியங்கள் அம்பலமானதுண்டு. இவை ஏற்படுத்திய பெரும் ஆரவாரங்களும், நம்பிக்கைகளும், அரசியல் வாதிகள் தங்கள் செல்வாக்கை வேறு வழியில் உயர்த்திக் கொள்ளும்போது வெறும் புஸ்வானமாக நமுத்து விடுகின்றன.

தி.மு.க. ஆட்சிக்காலத்தில் வந்த முக்கிய விசாரணைக்கமிஷன்கள் இரண்டு. உணவு அமைச்சர் ப.உ. சண்முகம் அரிசி கடத்தலில் தாண்டவராயன் என்பவருக்கு உதவ தனது செல்வாக்கைப் பயன் படுத்தியதாக் புகார். இதில் முக்கிய சாட்சி அதிகாரிகளே. எந்த அதிகாரிதான் ஆளுங் கட்சிக்கு எதிராக அரிச்சந்திர அவதாரம் எடுப்பார்? எனவே இது செத்துப் பிறந்த குழந்தையின் பிணமாகியது.

அடுத்து, அன்றைய முதல்வர் கருணாநிதிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் கொடுத்த போது ஏற்பட்ட மாணவர் கொந்தளிப்பில் உதயகுமார் என்ற மாணவர் கொல்லப்பட்டார். மாணவர்கள் மத்தியில் பெரும் கோபம் எதிரொலித்தது. தவிர்க்க முடியாதபடி விசாரணைக் கமிஷன் போடப்பட்டது. ஆனால் உண்மைகள் மூட்டை கட்டப்பட்டு கமிஷனுக்கு வராமல் பத்திரப்படுத்தப்பட்டன.

அவசரகாலம் வந்தபோது திமுக தலைவர்கள் மீது சர்காரியா கமிஷன் போடப்பட்டது. அது மத்திய ஆளும் கட்சியின் நோக்கத்தை நிறைவேற்றவே பயன்பட்டது.

அரசியல் உறவுகள் தலைகீழாக மாறி இப்போது தி.மு.க. இந்திரா காங்கிரஸ் உறவு அந்நியோன்யமாகி விட்டபோது, சர்காரியா கமிஷன் முடிவுகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

இதே போல ஜனதா, இந்திராமேல் போட்ட ஷா கமிஷனும், இந்திரா ஆட்சிக்கு வந்தவுடன் சுவடு இல்லாமல் அனைத்தும் பறிமுதலாக்கப்பட்டுள்ளன.

எம்.ஜி.ஆர். ஆட்சியில் இன்று எரிசாராய ஊழல் விசாரணைக்கமிஷன் பரபரப்பாகியுள்ளது. முன்னெச்சரிக்கையாக முதல்வர் முந்திக் கொண்டு தானாகவே கமிஷனை நியமித்துக்கொண்டு உள்ளார். அது தி.மு.க. ஆட்சிக்காலத்தில் எரிசாராய ஊழலையும் விசாரிக்குமாம். இந்த கமிஷன் போட்டதன் உள்நோக்கு வெறும் கண்ணுமூச்சிக்கே.

பண விரயத்தையும், விரக்தியையும் மக்கள் தலையில் கட்டிக்கொண்டிருப்பதற்கு அப்பால், மாற்றானின் அரசியல் செல்வாக்கைச் சிதைக்க கூரான ஆயுதமாகப் பயன்பட்டுள்ளதைத் தவிர, கமிஷன்கள் மக்களுக்காக எதையும் சாதித்ததில்லை, சாதிக்கப் போவதுமில்லை.

—சாமான்யன்.



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010




## நூல் விமர்சனம்: மரபு மீறிய கவிதைகள்

''முதிர்ச்சியைக் காட்டிலும் உணர்ச்சியின் உந்தலே என்னை இந்த முயற்சியில் குதிக்கச்செய்தது''—எனச் சொல்லும் வதிலை காளிதாசனின் வாக்கையே நாமும் ஆமோதிக்கிறோம்.

'மரபு மீறிய கவிதைகள்'—அவரது கவிதைத் தொகுப்பு இந்தியப் பெண்களைச் சொல்லும் அவர்,

''ஆடவர் ஜெயிலில்
ஆயுட் காலக் கைதிகள்
பலர்......''—என உண்மையின் முனைமழுங்காமல் காட்டியுள்ளார்.

''பொய்களில் நீந்தினேன்
உயிர் கொடுத்தார்கள்
உண்மையில் கரையேறினேன்
உதைக்க வந்தார்கள்''—சமூக நிலவரத்தை எப்படிப் பிளந்து காட்டுகிறார்.

''கடித்துச் சிவந்தது
அவள் கன்னம்
ஹை ஹீல்ஸ்
அடித்துச் சிவந்தது
இவன் கன்னம்''—இதில் கோபப் பாய்ச்சலைச் சுருக்கிவிட்டார்.

''குதறித் துப்பிய எச்சிலோடு
மண்ணில் விழுந்தது
அவன் குரல்வளை''—என்றல்லவா வந்திருக்கவேண்டும்.

**கிடைக்குமிடம்:-**

கோவஸ்கி
பதிப்பகம், 'நீதிபதி'
அலுவலகம்,
வத்லக் குண்டு-624 202.
விலை ரூ. 1-50.

**மசாலா பத்திரிகைகள் :**

# வாராந்தரி ராணி



● ஏழைகளுக்கென்று சில பொருள்களை உற்பத்தி செய்து பலர் பணக்காரர்களாகியிருக்கிறார்கள். தொட்டால் உடையும் கண்ணாடி வளையல், மாக்கல்லால் செய்யப்பட்ட பால்கோவா, ஒரே வெளுப்பில் சாயம் போகும் சேலை; இந்த வரிசையில் வாராந்திரி ராணியும் அடங்கும். அட்டையில், அச்சில் எல்லா அம்சங்களிலும் ஏழைகளுக்குரிய மேற்கண்ட பொருட்களின் கவர்ச்சியும், அதே நேரத்தில் ஒரு மூன்றாந்தரமும் தெரியும்.

● இன்று ராணி தமிழகத்தில் 2-வது அதிகமாக விற்கும் வார ஏடு (சுமார் 4 இலட்சம் பிரதிகள்)

20 ஆண்டுகளுக்கு முன்னால், பத்திரிகை படிக்காத ஏழை பாமர மக்கள் நிறைந்த பகுதிகளிளெல்லாம், தினத்தந்தியின் ஆற்றல் மிகு விற்பனை பலத்தால் திணிக்கப்பட்ட கவர்ச்சி ராணி கப்பென்று பிடித்துக்கொண்டது; பீடித்துக்கொண்டது. இளமையில் பீடி பழகிக் கொண்டவன் நிலையில், விடாமுடியமல் இலட்சக்கணக்கானோர்.

பின் எப்படி ஒரே மாதிரி திகட்டும் மேக்கப்புடன், வாரா வாரம் வெளிச்சம் போட்ட சினிமா ராணிகளின் முகங்களைச் சகிக்கிறார்கள். 18 வருடங்க்ளாக ஆபாச கேள்விகளுக்கு செக்சியாக பதில் சொல்லும், 16 வயது மாறாத அல்லி எப்படி புளிக்காமலிருக்கிறாள்? தத்துவ அசிங்கமான குரங்கு குசலா எப்படி இன்னும் குமட்டாமல் இருக்கிறது?.

மளிகைக் கடையில் வேலை செய்யும் பையன்களுக்கும், இந்த அலுவலகத்தில் பணிபுரியும் எழுத்துக் கூலிகளுக்கும் அதிக வேறுபாடில்லை. மளிகைக் கடையே மேல் என்று நினைக்க வைக்கும் சம்பளம்.

கஞ்சத்தனத்தின் ராணியான இப்பத்திரிகையில், ஒரு பிரபல ஓவியர் வேறு எங்கோ முன்பு போட்ட படங்களைப் பகுதி பகுதியாக டிரேஸ் எடுத்து சம்பள ஓவியரை வைத்து வெளியிடும் மூர்மார்க்கெட் வேலை நடக்கிறது. (உதாரணம்: 31-5-81 ராணி பக்கம் 14) வரும் கொள்ளை லாபத்தில் 1/. கூட படைப்பாளருக்குத் தர மனம் வராமல் மிச்சம் பிடிக்கும் எச்சில் தனம் இதன் தனித்தன்மை. →

→

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# வாராந்தர் ராணி...

மே பிறந்தால் நமக்கெல்லாம் தொழிலாளர் தினம்தான் நினைவில் வரும். ராணிக்கோ மே தினத்தன்று நடிகை ஷோபாவின் இறந்ததினம் மட்டும் தான் பளிச்சிடுகிறது.

இதன் ஆசிரியர், தினத்தந்தி குடும்பத்தைச் சேர்ந்த அ. மா. சாமி, அதாவது அ. மாடசாமி. குட்டித்தீவை எட்டிப்பார்த்த குரும்பூர் குப்புசாமி-யும் அவரே. அமுதா கணேசனும் அவரது அவதாரமே.

சென்னையில் மார்ச் 15 அன்று நடைபெற்ற ஓர் எழுத்தாளர் மாநாட்-டில் இந்த குடும்பப்பத்திரிகை ஆசிரியர் இப்படிப் பேசியிருக்கிறார்:-

''பத்திரிகை என்பது ஒரு தொழிற்சாலை. அங்கு லாப நோக்கம் தான் இருக்கும். மற்றபடி பத்திரிகைகளுக்குச் சமுதாயப் பொறுப்பு இருப்பதாக நான் கூற மாட்டேன். பாலுணர்வு கலந்த விஷயங்கள் தான் எடுபடும். ராணி பத்திரிகையைப் பொறுத்தவரை, எங்களது வாசகர்களுக்குத் தீனி போட வேண்டி, மிக எளிமையான மக்கள் பேசிக்கொள்ளும் பாஷையில் எழுதப்படும் செக்ஸ் கலந்த கதைகளையே பிரசுரிக்கிறோம்.

இளம் எழுத்தாளர்கள் முன்னேற வேண்டுமானால் பிச்சைக்காரியைப் பற்றி எழுதக்கூடாது. கல்லூரி மாணவியைப் பற்றி எழுத வேண்டும். செக்ஸ் கண்டிப்பாக கலந்து விடப்பட வெண்டும். இந்த நுணுக்கம் தெரிந்துவிட்டால் இளம் எழுத்தாளர்கள் முன்னேறி விடலாம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறை சொல்லிப்பயனில்லை இதெல்லாம் தீர்க்க முடியாத ஒன்று. பணம் படைத்தவர்கள்-ஏழைகள் இந்த வித்தியாசங்கள் நீடிக்கத்தான் செய்யும்''.

ராணியின் மேக்கப்பைக் கலைத்து காட்டியிருக்கிறார் குரும்பூரார், மக்களுக்கு உங்களை இனம் காட்டியமைக்கு நன்றி. கிராமங்கள் இனி விழித்துக் கொள்ளும். *(அடுத்து சாவி)*

**—எழில்.**


**.S. Chand & Company Limited**

**152, Anna Salai, Madras-2.**

*Text Book Publishers in all Subjects for various Courses.*

*H. O.: NEW DELHI.*


# கையெழுத்துப் பத்திரிகைகள்




மசாலா பத்திரிகைகளின் சப்புச்சவரென்ற பார்மூலா பக்கங்களை விட அர்த்தமுள்ளதாக, வியாபார நாற்றத்திலிருந்து வெகு தூரம் ஓடிப்போய் உயிரோட்டமாக கலை இலக்கிய தாகத்துடன் பல கையெழுத்துப் பத்திரிகைகள் விளம்பரமின்றி வலம் வந்து கொண்டிருக்கின்றன.

சில நூறு பேர்களை மட்டுமே இவை எட்ட முடிந்தாலும் இவற்றின் செயல் நேர்மை மகத்தானது. அர்ப்பணிப்பு ஆச்சரியகரமானது.

புதிய சகாப்தத்தின் மூலக்கூறுகளை உள்ளடக்கி, நெஞ்சில் இருப்பதை, இருப்பது போல வடிக்கவிடும் இளம் எழுத்தாளர்கள். மழையின் மொழி போலும் ஆரம்பத்துடிப்புடன் துள்ளல் நிறைந்த கட்டுரையாளர்கள், பட்டை தீட்டா வைர ஓவியர்கள்.

கையெழுத்து பத்திரிகைகளின் மறைவில் இருக்கும் திறமைமிகு எழுத்தாளர்களையும், ஓவியர்களையும் சுட்டி அச்சில் அவ்வப்பொழுது வெளிச்சம் போட்டுக் காட்டுவதை தனது கடமையாக நினைக்கிறது.

பணமும், பப்ளிசிட்டியும் இல்லாவிட்டாலும் முற்போக்கும் அர்ப்பணிப்-பும், இளமையும் இருப்பதால் இவர்கள் ஒரு பகுதி மக்களைக் கவர்ந்திருக்-கிறார்கள். இதனையும் தாண்டி, மேலும் ஒரு படியாக, சகோதர உணர்வுடன் மற்ற கையெழுத்துப் பத்திரிகைகளையும் ஒன்றிணைய அழைக்கிறார்கள்.

முதல் முயற்ச்சியாக 4.7.81 அன்று முழுநாளும் கையெழுத்துப் பிரதிகளின் முதல் மாநாடு நடைபெற விருக்கின்றது.

இடம்:- பம்மல்

கலந்து கொள்ள இருக்கும் முக்கிய பத்திரிகைகள்:-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | உதடுகள் | 2 | OPINION | 3 | இமைகள் | 4 | தென்றல் |
| 5 | இதயகீதம் | 6 | சிறகுகள் | 7 | பிம்பம் | 8 | யௌவனம் |
| 9 | பரணி | 10 | பூச்சரம் | 11 | தேனருவி | 12 | இளைஞன் |

இந்தப் பட்டியல் இன்னும் வளரும், தமிழகமெங்குமுள்ள முற்போக்கு கையெழுத்துப் பிரதிகளும், இந்த மாநாட்டிற்கு அழைக்கப்படுகின்றன.

அமைப்பாளர்கள்:- எம். ஷேக், G. மாதவராஜன்,

இம்மாநாடு சிறப்பாக நடைபெற பொருளாதார பிற ஒத்துழைப்புகள் கோரப்படுக்கின்றன.

தொடர்பு கொள்ள :-

**மாநாட்டுக் குழு** — *நிர்வாகி,*
**8, ஏகாம்பரம் தெரு, பல்லவா நர்சரி அருகில்,**
**பம்மல், சென்னை-600 075.**


FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# காசு விழுங்கும் தொலை பேசிகள்



அரசுக்குச் சொந்தமான ஒரு குண்டூசியைத் திருடினால்கூட இ.பி.கோ.—படி தண்டனை உண்டு. ஆனால் அரசு, அதிலும் மத்திய அரசு தனி மனிதனிடமிருந்து, மறைமுகமாக அல்ல, நேரிடையாக பச்சையாக அன்றாடம் திருடிக்கொண்டிருக்கிறது.

'பப்ளிக் டெலிபோனில்' 90%க்கும் மேலாக 50 காசை விழுங்கி ஏப்பம் விடுபவைதான். ஒவ்வொரு பப்ளிக் டெலிபோன் 'பூத்'திலும் ஒரு பொதுஜனம் ஆற்றாமையால் போனை அடித்து போராடிக் கொண்டிருப்பது நமக்கு தினசரி காட்சி.

ஒருவர் நடு ஊரில் ஒரு 'மிஷினை' வைத்து 50 காசு போட்டால் 'சாக்கலேட்' வரும் என்று அறிவித்து, அதன்படி பலர் காசுபோட்டு 'சாக்கலேட்' வரவில்லை என்றால் இபிகோ 420 படி அது மோசடி என்று அதன் உரிமையாளர்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். ஆனால் அதே மோசடியை அரசு செய்யும் போது?

தவிர்க்க முடியாத அவசரத்தினாலும், அத்தியாவசியத்தினாலும் லட்சக்கணக்கானவர், லட்சக்கணக்கான பணத்தை இந்த 'டெலிபோன் மோசடியில்' இழந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பச்சை மோசடிக்கு நாம் வழக்கமாக நொந்துகொள்ளும் அரசியல்வாதிகளும், அரசியல் அமைப்புகளும் மட்டும் காரணமல்ல; இதில் அதிகாரிகளுக்கும் பொறுப்புண்டு. இதைப்பற்றி தட்டிக்கேட்க வேண்டிய பொறுப்பு பொது மக்களுக்கும் உண்டு.

— சுயராஜ்



# சுட்டியாரின் பதில்கள்

ஒரு பத்திரிகையை அது தரமானதா இல்லையா என்பதை எப்படி அறிந்து கொள்வது?

**அ. கமலக்கண்ணன், சென்னை-30.**

**காசுக்கோ, சர்குலேஷனுக்கோ மட்டுமே எதனையும் கூசாமல் விற்றுக்கொள்ளாமல், மனித மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்ற பத்திரிகைகள் தரமானவை.**

இன்றைய தமிழ் இலக்கியம் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளது? **எஸ். ரவீந்திரன், கோட்டகச்சேரி.**

**ஒரு பக்கம் விடியலுக்குப் போராடும் மக்களுக்குத் தோள் கொடுக்கும் இலக்கியங்கள்; மறு பக்கம் மக்களைக் கவர்ச்சியில் ஆழ்த்தும் நசிவு இலக்கியங்கள். இப்படி ஒரு டக்-அப்-வார் நடக்கிறது**

சில பத்திரிகை நிறுவனங்கள் அதிகமான பத்திரிகைகளை பெருமையாக துவங்கி, பின்பு இடையில் நிறுத்தி அல்லல் படுவதைப் பற்றி...

**இப்படிச் செய்பவர்கள் பேப்பர், மை, மக்கள் பலவீனம் இவற்றை வைத்து வியாபாரம் செய்யும் மூன்றாந்தர வியாபாரிகள் இவர்கள் அல்லலைக் கண்டு நமக்கு அனுதாபமில்லை**

சினிமாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**B. சலாஹுதீன், நாகப்பட்டினம்.**

**இந்நூற்றாண்டின் இமாலயக் கண்டுபிடிப்பு. புதிய இலக்கிய வடிவம். ஞானக் கண்ணாடி ஆனால் அந்தோ அணுகுண்டைவிட அதிக அழிவைச் செய்து வருவதும் அதுவாக இருக்கிறதே.**



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# புகை பிடிப்பதனால் ஏற்படும் நன்மைகள்

உல்லாச இளைஞன் ஒருவன் தாடி நரைத்த பெரியவர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டான்.

"ஐயா! நான் புகைபிடிக்கக் கற்றுக்கொள்கிறேன். அது நல்லது தானா? நன்மை அளிப்பது தானா?" என்று கேட்டான்.

"புகை பிடிப்பது மூன்று காரணங்களினால் நல்லது ஆகும்" என்று கூறி, அந்த ஞானி விளக்கலானார்.

"முதலாவதாக புகை பிடிக்கிறவன் முதுமை அடையவே மாட்டான்..."

"அது எப்படி?"

"ஏனெனில் புகை பிடிக்கிறவன் முதியவனாவதற்கு உரிய வாய்ப்பைப் பெறுவதே இல்லை. அவன் ரொம்ப இளமையிலேயே செத்துப்போவான். இரண்டாவதாக அவன் வீட்டில் களவு நடக்கவே நடக்காது..."

"ஏன்?"

"ஏனென்றால் புகை பிடிக்கிறவன் இரவு பூராவும் தன் படுக்கையில் உருண்டு புரண்டு, சத்தமிட்டு இருமியபடி கிடக்கிறான். அவன் இருமுவதைக் கேட்டு திருடர்கள் அவன் வீட்டைத் தாண்டி அப்பால் போய் விடுகிறார்கள். புகை பிடிக்கிறவன் நாயினால் கடிபடவே மாட்டான்."

"அப்படியா?!"

"ஏனென்றால் புகை பிடிக்கிறவன் சீக்கிரமே முடமாகி விடுகிறான். கையில் தடி பிடித்தபடி நடக்கிறான். நாய்களுக்குத் தடிகள் மீது பிரியம் கிடையாது மகனே."

— யாரோ

# ஏழைகள் சொந்த ஜாமீனில் வர முடியுமா?



மோதிராம் ஒரு கொத்தனார். மத்திய பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் ஒரு வழக்கில் தலைமை நீதி மன்றத்தில் ஜாமீன் உத்திரவு பெற்றிருந்தார். அதன்படி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஜாமீன் கொடுப்பவரைக் கூட்டி வந்து ஜாமீன் பத்திரம் கொடுத்து ஜாமீன் எடுக்கலாம். ஆனால் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டோ ரூ. 10,000 மதிப்புள்ள சொத்தை ஜாமீன்தாரர் காட்டியாக வேண்டும் என நிபந்தனை போட்டார்.

ஏழையான மோதிராம் சொத்துள்ள தன அண்ணனை ஜாமீன் கொடுக்கக் கூட்டிவந்தார். கோர்ட் இருக்கிற மாவட்டத்தில் அவரது சொத்துக்கள் இல்லையென்று கூறி அவரை ஜாமீன்தாரராய் ஏற்க மறுத்து விட்டார் மாஜிஸ்ட்ரேட்.

நொந்து போன மோதிராம் தலைமை நீதிமன்றத்தை மீண்டும் அணுகி நியாயம் கேட்டார். தலைமை நீதிமன்றம் மாஜிஸ்ட்ரேட்டின் போக்கைக் கண்டித்து இவ்வாறு கூறியது:– "இந்திய மக்களாகிய நாங்கள் என்பதில்– கசாப்புக் கடைக்காரர், மெழுகு வர்த்தி செய்பவர், கொத்தடிமையாயிருப்பவர், நடை பாதைவாசிகள் ஆகியோரும் சேர்ந்தவர்களே" எனச்சொல்லி ஏழைகளால் ஆனதுதான் இந்தியா என்பதைக் கோடிட்டுக் காட்டியது. மேலும்,

"மாஜிஸ்ட்ரேட் சொந்த மாவட்ட ஜாமின்தாரர் வேண்டும் எனக் கேட்பது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும்" என்று சாடியதுடன் மோதிராமை சொந்த ஜாமினில் விட உத்திரவிட்டது.

இது போல பல தீர்ப்புகளில் கீழ் நீதி மன்றங்களின் போக்கை தலைமை நீதி மன்றம் கண்டித்துள்ளது. அதோடு ஜாமீன் மற்றும் நடைமுறை விதிகளை ஏழைகளுக்கும் உதவும்படி நாடாளு மன்றம் திருத்தம் செய்வது நல்லது எனக்கூட வலியுறுத்தியது. இது 1978-ல் வந்த தீர்ப்பு. ஆனாலும் சொந்த ஜாமீன் முறை ஏழைக்கு எட்டாததாகவே உள்ளது. எதுவும் செயலில் வந்தபாடில்லை.

ஏழை மக்களுக்குத் தவணை முறையில் வாக்குறுதிகளைக் கொடுக்கலாம்; அதன் மூலம் தங்கள் அரசியல் மார்க்கட்டை வளமாக வைத்துக்கொள்ளலாம் என நினைக்கிறார்கள் இந்த அரசியல் வாதிகள். — இரத்தினம்.

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# வேலையற்ற இளைஞர்களுக்கு மூலதனமில்லாமல் வருவாய்

)–❖–(

போன் : 420

தொடர்பு கொள்ளுங்கள்.

**ராமமூர்த்தி ஆப்செட் பிரிண்டர்ஸ்**

106, பெரியகருப்ப நாடார் காலனி,
தபால் பெட்டி எண். 33,
சிவகாசி-626 123.

❖

எமது தயாரிப்புகள் :—

ஆப்செட் பிரிண்ட் லேபில்கள்
பலதரப்பட்ட காலண்டர் வகைகள்
பிளாஸ்டிக் கீசெயின்கள்
பேப்பர் கவர்கள், மற்றும் பல.

எமது ஏஜென்சி எடுத்து பயன் அடையுங்கள்.


# நரிக்குறவர் தொழிற்பேட்டை

தி. நகரில் பிரகாசம் சாலை இப்பொழுது ஒரு நரிக்குறவர் தொழிற்பேட்டையாக மாறிவிட்டிருக்கிறது. வசதியான பனகல் பார்க்கின் வடக்குப்புறம்; குளிர்ந்த மர நிழல், போதாததிற்குப் பக்கம் பக்கமாக நான்கு பல்லவன் போக்குவரத்து நிழற்குடைகள்.

இனி அங்கே பயணிகள் நிற்க முடியாது. ஏறத்தாழ 100 நரிக்குறவர்கள் தங்கள் குழந்தை குட்டி, பூனைக்குட்டி, நாய்க்குட்டிகளுடன் அந்தத் தெருவையே ஒரு நரிக்குறவர் சேரியாக ஆக்கிவிட்டிருக்கிருர்கள்.

அவர்கள் சோம்பேறிகள் அல்ல. ஆணும் பெண்ணும் சிறியவர்களும் பெரியவர்களும் உண்டிவில் தயாரிப்பில் முழுமூச்சாக ஈடுபட்டிருப்பதைப் பார்க்கலாம்.



ஒருபுறம் கவைக்குச்சிகள் சீவப்படுகின்றன. அவற்றிற்கு வண்ணக் கலவைப் பூச்சு ஒரு புறம் அளிக்கப்படுகிறது. ரப்பர்கள் வெட்டுவதும் கட்டுவதும் ஒரே களேபரம்.

இப்படி வேலை செய்வதில் சற்றும் சோம்பலே இல்லாத இந்த மக்களுக்கு என்று ஒரு மினி தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுத்து அவர்களை மேல் நிலைக்கு கொண்டு வர முடியாதா? இன்னும் ஆக்கப்பூர்வமான கைத்தொழில்களுக்கு இவர்களைப் பயன்படுத்திப் பார்த்தால் என்ன? இதற்கு ஸிப்காட்டும், ஸிட்கோவும் அரசாங்கமும் கொஞ்சம் கடைக்கண் பார்க்கலாகாதா என்று கேட்கத் தோன்றுகிறது

•

—சுட்டி பாரதி



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# வாடகைச் சட்டம் — வாடகை வீடுகள்

கடந்த 3 ஆண்டுகளில் வீட்டு வாடகை நகரங்களில் 2 அல்லது 3 மடங்கு விஷமாக ஏறியுள்ளது.

மனித குடியிருப்பின் குறைந்த பட்ச தேவைகள் கூடப் பூர்த்தி செய்யப் படாத பொந்துகளில் தான் நமது நகரங்களின் பெரும்பகுதி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உணவு, உடை, போல உறையுளும் நமக்குக் கடும் பிரச்சனையாகி வருகிறது.

ஒரு வீட்டையே பல கூறுகப் பிரித்து ஒண்டுக்குடித்தனம் நடத்தும் மூத்திர சந்துகளிலிருந்து நமது சராசரி மக்களுக்கு இன்னும் விடிவு பிறக்கவில்லை.

ரூ. 150 முதல் 300 வரை உள்ள இதுபோன்ற பொந்து வீடுகளுக்குக் ரூ. 750 முதல் 1800 வரை அட்வான்ஸ் தேவைப்படுகிறது. ஒரே அறை துணியால் தடுத்த சமையல் அறை, ஒரே ஜன்னல், அதுவே படிப்பு, படுக்கை, பொழுதுபோக்கு, உணவு அறை! பல வீடுகளுக்குச் சேர்ந்து ஒரு கழிவறை, குளியலறை, பகுதி நேரம் இயங்கும் குழாய்.

ரெண்ட் கண்ட்ரோல் சட்டப்படி இப்போது ரூ. 400 வரை வாடகையுள்ள வீடுகளை அது கட்டுப்படுத்த வேண்டும். ஆனால் சென்னையில் மட்டுமுள்ள 1.25 இலட்சம் வாடகை வீடுகளில் 1400 தான் இதன் பார்வைக்குக் கீழ் வந்துள்ளது.

நகரங்களில் பல பேர்கள் வியாபார ரீதியாக வீடு கட்டிப்போட்டு ஆறு மாதத்திற்கொரு முறை வாடகையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். வாடகை உயர்வு தர மறுத்தால், மின்சார நிறுத்தம், தண்ணீர் நிறுத்தம், வருவோர் போவோரை அவமானப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

சண்டை போட விரும்பா நடுத்தர வர்க்கம் கேட்டதைக் கொடுக்கிறார்கள். அல்லது அடுத்த வீடு பார்க்கிறார்கள். சுமார் 30.|° வருவாயை வீட்டு வாடகை விழுங்கிக் கொண்டிருக்கிறது.

வீட்டில் போட்ட முதலீட்டிற்கு பாங்க் வட்டியை விடக் குறைவாக வாடகை வருகிறது என்பது பல வீட்டுக்காரர்களின் முறையீடு.

குறைந்த வாடகை தருவதாக அதிகாரியிடம் கூறச் சொல்லுதல், ரசீது தராது இருத்தல் இவை வாடிக்கை. இப்போது வீட்டு வரியையும் வாடகைக்காரர்களே கட்ட வேண்டும் என்ற புது மரபும் தோன்றிக் கொண்டிருக்கிறது. → → →

## வாடகைச் சட்டம் என்ன சொல்கிறது?

1. ஒரு மாத வாடகை அட்வான்ஸ் போதுமானது. அதிகம் கொடுத்திருந்தால் திருப்பிப் பெறலாம். அல்லது குடியிருப்பவர் சம்மதித்தால் பின் வரும் மாத வாடகைக்குச் சரி செய்து கொள்ளலாம்.

2. வீட்டுக்காரர் வாடகையாளருக்கு ரசீது கொடுக்க மறுக்கும்போது, ஒரு நோட்டீஸ் அனுப்பி, இனி வாடகையைப் பாங்கில் கட்ட அவரது பாங்க் விவரத்தையும், கணக்கு எண்ணையும் தெரிவிக்கும்படி கேட்க வேண்டும்.

3. மேற்கண்ட விவரம் தர வீட்டுக்காரர் மறுத்தால், பண விடை மூலம் அனுப்பலாம். அதற்கான கட்டணத்தை வாடகையிலிருந்து கழித்துக் கொள்ளலாம்.

4. பண விடையை வீட்டுக்காரர் பெற மறுத்தால், இதற்காக உள்ள கோர்ட்டில் மனுப்போட்டு தொடர்ந்து கட்டி வரலாம். வீட்டுச் சொந்தக்காரர் யார் என்பதில் பிரச்சனை இருந்தாலும் மனுப் போட்டு கோர்ட்டில் கட்டி வரலாம்.

5. குடியிருப்பவர் சரியாக வாடகை கட்டாவிடில் வீட்டுக்காரர் கோர்ட்டில் மனுப்போட்டு, குடியிருப்பவருக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரணைக்குப் பின்னர் தான் காலி செய்ய உத்தரவு கிடைக்கும். மற்றபடி போலீசுக்கோ, மற்றவர்களுக்கோ சட்டப்படி காலி செய்விக்க உரிமையில்லை.

6. வாடகைக்காரர் அனுபவிக்கும் வசதிகளாகிய மின்சாரம், தண்ணீர் போன்றவற்றைத் தக்க காரணம் இன்றி நிறுத்த முடியாது. தக்க காரணம் என்பது குடியிருப்பவர் மின்சார மோசடி செய்தல், மின் கட்டணம் கட்டாமை, அதற்கு சேதம் செய்தல் போன்றவையாகும்.

7. அதிக வாடகை கொடுத்துக்கொண்டு வந்தால் நியாய வாடகைக்குக் குறைக்க வாடகைக்காரர் மனுப் போடலாம்.

*குடியிருப்போருக்கு உள்ள பிரச்சனைகளைப் பற்றி சட்ட ஆலோசனை வழங்க சுட்டி, வழக்கறிஞர் குழுவை ஏற்பாடு செய்துள்ளது. வாடகைக்காரர்கள் பிரச்சனையை எழுதினால் இலவசமாக சட்ட ஆலோசனை வழங்கப்படும். கவரின்மேல்*
***சட்ட ஆலோசனை** என்று குறிப்பிடவும்.*

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

நீண்ட க்யூ வரிசையில் வீடு தேடி நிற்பவர்கள் இருப்பதால் நினைத்தபடி வீட்டுக்காரர்கள் விதிகளை வீசுகிறார்கள்.

வீட்டு வசதி வாரியம் என்ன செய்கிறது? கடைசியாக செய்தது தவணைத் தொகையை 20 ஆண்டிலிருந்து 10 ஆண்டுக்குக் குறைத்த கைங்கரியம்! ஆரம்பித்த நாளிலிருந்து 1982 வரை வீ. வ. வாரியம் கட்டி முடிக்கப்போகும் வீடுகள் :- LIG - 9498; MIG - 8144; EWS (குறைந்த வருவாய்க்காரர்களுக்கு) - 8383 அதாவது 26,025 வீடுகளைத்தான் கட்ட முடிந்திருக்கிறது. சென்னை நகரின் ஜனத்தொகை மட்டும் 35 லட்சம் 1.|° மக்களுக்குக்கூட அதனால் வீடு தர முடியவில்லை. காரணம் கேட்டால் ஒவ்வொரு கோடி ரூபாயிலும் 50 வீடுகள் (Flats)தான் கட்ட முடிகிறது, பணமில்லை என்கிறார்கள்.

திடீர் திடீரென நகரங்களில் எப்படியோ ராட்சச மாளிகைகள், அடுக்குக் கட்டிடங்கள் தோன்றுகின்றன. சிமெண்ட் பஞ்சம், இடப்பஞ்சம் நமக்கு மட்டும் தான்.

20 லட்சம் பேரின் வீட்டுப் பிரச்சனையை நவீன முறையில் அரசு தீர்க்கமாக சிந்தித்து செயல்படுத்திய சிங்கப்பூருக்கு நம் அமைச்சர்கள் போய் வருவது வேடிக்கைப் பார்க்கவும், பொருள்கள் வாங்கவும் தானா?

**—எழில், மாறுடன்.**

## "சுட்டி" கிடைக்காதோருக்கு...

எங்களிடம் பதிவு செய்யப்பட்ட அத்தனை சந்தாதாரர்களுக்கும், இதழ் அஞ்சலிடும் முன் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்படுகிறதா என்று கடுமையாக பரிசோதித்த பின்னரே அனுப்புகிறோம். அஞ்சலில் வருகையில் ஏதோ தவறு நேரலாம். அஞ்சல் துறைக்கும் புகார் அனுப்பியுள்ளோம். 20ஆம் தேதிக்குள் இதழ் கிடைக்காதோர், தங்கள் முகவரியையும், சந்தா கட்டிய விவரத்தையும் குறிப்பிட்டு எழுதினால் மீண்டும் சரிபார்த்து எங்கள் செலவிலேயே இதழ்களை அனுப்பி வைக்கிறோம்.

- ☐ ஒவ்வொரு மாதமும் **15ஆம் தேதி** சுட்டி வெளிவரும்.
- ☐ 12 இதழ்கள் அஞ்சலில் பெற ஆண்டு சந்தா ரூ. 3-00 பணவிடை செய்யலாம்.
- ☐ எல்லாத் தொடர்புகளுக்கும்:-

ஆசிரியர் குழு, '**சுட்டி**' 17, கஜபதி தெரு, சென்னை-600 030.

# மூன்று கால் மனிதர்



சாலையில் செல்வோர் அனைவரும் ஒரு கணம் நின்று பார்த்து வியக்கும் வண்ணம் மூன்று கால்களுடன் ஒரு மனிதர் உலாவினார். அவர்தான் பிராங்க் லெண்டினி.

இடுப்பின் வலப்புறத்திலிருந்து முழு வளர்ச்சியடைந்துள்ள இவரது மூன்றாவது கால் டாக்டர்களை அதிர வைத்தது. இக்காலை அறுவை சிகிச்சை மூலம் அகற்றினால் ஒன்று அவர் உயிர் துறப்பார் அல்லது முடக்கு வாதம் தோன்றும் என டாக்டர்கள் ஆராய்ந்தறிந்தனர்.

பிராங்கின் பள்ளிப் படிப்புக்குச் சக மாணவர்களின் கிண்டலும் கேலியும் முற்றுப்புள்ளி வைத்தன. மனம் நொந்த பிராங்க் கடைசியில் உடல் ஊனமுற்றோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

தன்னைவிட ஊனமுற்றோரது நிலையைக் கண்ட பிராங்க் மனப்பக்குவம் பெற்றார். தானாக சாலையில் உலரவ ஆரம்பித்த இவர், பிறரது கேலிகளை அசட்டை செய்யக் கற்றுக் கொண்டார். முதலில் நல்ல சம்பளத்திற்கு ஒரு சர்க்கஸ் கம்பெனியிலேயே போய்ச் சேர்ந்தார்.

நான்கு மொழிகளில் பேசி மூன்று கால்களுடன் இவர் செய்த குறும்புகள் சர்க்கஸ் கம்பெனிக்கு ஏராளமான வருவாயைத் தந்தது.

நடக்கும்போது இரு கால்களை மட்டும் பயன்படுத்துவார். மூன்றாவது கால் நாற்காலியில் உட்காருவது போல் அமர்ந்துகொள்ள உதவியாக இருந்தது. மூன்று கால்களாலும் பந்து விளையாடி பிறரை மகிழ்விப்பார், இவருக்குச் சிறப்பாகத் தைக்கப்படும் கால் சட்டைகளில் மூன்று கால்கள் உண்டு

ஒரு ஜோடி செருப்புகளை வழக்கமான கால்களில் அணிவார். மற்றொரு ஜோடி செருப்பின் வலது கால் செருப்பை 3-வது காலில் அணிவார். ஒரு கால் மட்டுமே கொண்ட தமது நண்பர் ஒருவருக்கு எஞ்சியுள்ள இடது கால் செருப்பைக் கொடுத்து விடுவார்.

**—அக்கினி.**



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# அதிசய உணவுப் பொருள்



- தேங்காய் எண்ணெயில் இதனைப் போட்டு காய்ச்சி காயங்களுக்கும் புண்களுக்கும் தடவலாம். விரைவில் ஆற வைக்கும்.
- தேள் கொட்டிய இடத்தில் வெட்டித் தேய்த்தால் விஷம் இறங்கும் - வலி குறையும்.
- தலைவலிக்கு இதனை அரைத்துப் பற்று போட்டால் குணமாகும்.
- ஜலதோஷமா? இதனை முகர்ந்து வந்தால் சரியாகி விடும்.
- வயிறு முட்ட சாப்பிட்டு விட்டீர்களா! வேண்டாம் கவலை இதனைத் துண்டாக்கி பச்சையாக சாப்பிடுங்கள். ஜீரண-மாகிவிடும். மீண்டும் விருந்து சாப்பிடலாம்.
- கடுமையான பணிகளில் ஈடுபடுபவர்கள் இதனை அடிக்கடி சாப்பிடுங்கள் பலவீனம் குறையும்.
- தினமும் சாப்பாட்டில் அதிகமாக இதனைச் சேர்த்து வந்தால் எந்த நோயும் எளிதில் வரா.
- வெயிலில் செல்லுகிறீர்கள். கையில் இதனை எடுத்துச் சென்றால் வெயிலின் கடுமை தெரியாது.
- இதில் ஏ.பி.சி. மூன்று வைட்டமின்களும் ஒருங்கே இருக்கின்றன.
- வியாதியஸ்தர்களின் தலைமாட்டில் இதனை வைத்தால் நோய்க்கிருமிகள் அணுகா.

**என்ன இது?**

- நாம் விலை குறைவாக வாங்கக் கூடிய வெங்காயம் தான் இது. மலிவாகக் கிடைக்கும் அதிசயப் பொருள். தினமும் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

தொகுப்பு:- **த. சத்தியநாராயணன்,**



# போலீஸில் அரசு தலையீடு இல்லை



காவல் துறைத் தலைவர் திரு. அப்துல்லா இந்த திடுக்கிடும் தகவலைப் பத்திரிகையாளர் பேட்டியில் வெளியிட்டிருக்கிறார். பதவியை விட்டு சௌதி அரேபியாவிற்கு இந்தியத் தூதராகச் செல்வதற்கு முன் "தமிழக போலீஸ் நிர்வாகத்தில் ஆளும் கட்சியினர் தலையீடு இல்லவே இல்லை. எம்.ஜி.ஆர். போலீஸ் துறையைத் தன்னிடம் வைத்திருப்பதால் மற்ற அமைச்சர்கள் கூட தலையிடுவதில்லை" என்று உண்மையின் முகத்தில், மாறி மாறி அறைந்தது போலச் சொல்லியிருக்கிறார்.

ஆனால் மத்திய அரசு நியமித்த போலீஸ் கமிஷனின் உறுப்பினரான ருஸ்டம்ஜியின் கருத்து முற்றிலும் மாறுபட்டதாக, உள்ளதே! சில கசப்பான உண்மைகள் வெளி வருகின்றனவே.

"போலீஸ் துறையில் ஊழல் கூடியுள்ளது. தரம் **இந்தியா வெங்கும்** கெட்டுப்போயுள்ளது. ஐ.பி.எஸ். அதிகாரிகளிடம் நியாயத்திற்கு நிற்கிற மனவலிவு போதவில்லை. இதனால் தான் அவர்களால் போலீஸ் துறைக்குச் சரியான தலைமையைத் தர முடியவில்லை" என்பதுடன், இந்தியாவெங்கும் அரசியல் தலையீடுகள் கடுமையாகப் பாதித்துள்ளன என வெளிச்சம் போட்டும் காட்டியுள்ளார்.

சில உண்மைகள் இதோ: தமிழகத்தில் தனியார் டூரிஸ்ட் பஸ்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாக நூற்றுக்கும் அதிகமான போலீசார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. பின்னர் எந்த விளக்கமும் தெரிவிக்கப்படாது மர்மமாக நடவடிக்கைகள் கைகழுவப்பட்டன.

ஐ.பி.எஸ். அதிகாரிகள் பதவி உயர்வில் அரசு தலையீடுகள் நடந்ததாக சில ரிட் மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் விசாரணைக்கு உள்ளன. ஏன், அப்துல்லா சென்ற பின் காலியாக உள்ள அந்த இடத்தை நிரப்புவதில் கூட அரசியல் புகுந்துள்ளதே!

இந்த உண்மையெல்லாம் மக்களுக்குத் தெரிந்திருந்தும், எதனை முன்னிட்டு உண்மையைப் பிணமாக்கப் பார்க்கிறார் அப்துல்லா!

**— மானுடன்**



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# Our Books for Competitive Examinations

## Permier Digest Series

by

**RAJENDRA PAL, PREM PURI & SUDARSHAN CHOPRA**

| No. | Title | | Rs. | P. |
|---|---|---|---|---|
| 1 | Bank Probationary Officers | Rs. | 30 | 00 |
| 2 | Life Insurance Corporation of India (Assistant Administrative Officers) (Class-I) | Rs. | 30 | 00 |
| 3 | General Insurance Corporation of India (Assistant Administrative Officers) (Generalists) | Rs. | 25 | 00 |
| 4 | Auditors/Junior Accountants/U.D.Cs. | ,, | 30 | 00 |
| 5 | Banks Selection Tests (Clerk · Cadre) | ,, | 15 | 00 |
| 6 | General English for Competitive Examinations | ,, | 30 | 00 |
| 7 | Modern Essays for Competitive Examinations | ,, | 10 | 00 |
| 8 | General Knowledge (Objective Type Tests) | ,, | 15 | 00 |
| *9 | General Studies & General Knowledge Civil Services Preliminary Examination) | Rs. | 30 | 00 |
| *10 | Income tax, Excise, Custom's Inspectors | ,, | 25 | 00 |
| *11 | Assistant Grade | ,, | 25 | 00 |
| *12 | Combined Defence Services Examination | ,, | 25 | 00 |
| *13 | N D A. | ,, | 25 | 00 |
| *14 | Stenographer's Examination | ,, | 25 | 00 |
| 15 | Chemistry Objective Tests by Dr Gnanapragasam | ,, | 12 | 50 |
| 16 | I.I.T. Joint Entrance Examination Guide | | | |
| | Chemistry—R.N.Sarin. | Rs | 25 | 00 |
| | English—Rajendra Pal | ,, | 10 | 00 |
| | Mathematics—J.D. Gupta & H.C. Saxena | ,, | 15 | 00 |
| | Physics—D.S. Mathur | ,, | 15 | 00 |
| 17 | Objective Type Questions in Advanced Accountancy by Dr. N.K. Kakkar | Rs. | 10 | 00 |
| 18 | Objective Type Questions in Cost Accounting by M.N. Arora | Rs. | 5 | 00 |
| 19 | Objective Type Questions in Law for Civil Services Preliminary Examination by N.D Kapoor | Rs. | 4 | 00 |
| 20 | Objective Type Questions in Mercantile Law by N.D Kapoor | Rs. | 4 | 00 |
| 21 | Objective Type Questions in Banking Law and Practice by Jeevanandam | Rs. | 3 | 00 |
| 22 | Objective Type Questions in Statistics by Dr. S.P Gupta | Rs. | 4 | 00 |
| 23 | Objective Type Questions in Micro Economics | ,, | 6 | 00 |
| | Macro Economics | ,, | 6 | 00 |
| | Indian Economy by I C. Dhingra | ,, | 10 | 00 |
| 24 | Question Bank Book in Economics by I.C. Dhingra | Rs. | 20 | 00 |
| 25 | Jobs, Careers and Personality—Monthly Magazine for Success Oriented Students | | | |
| | Annual Subscription | Rs. | 18 | 00 |
| | Single Issue | ,, | 2 | 00 |

*The books carrying the star marks are yet to be released.

**SULTAN CHAND & SONS**
*Publishers*
23, Daryaganj, New Delhi-110 002.


FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# சம்பல்நாத் கொள்ளையர்கள் கதி

சம்பல் பள்ளத் தாக்கில் கொள்ளைக்காரர்கள் மே 16 அன்று சரணடைய முயற்சிகள் நடந்தன. இதற்காக அங்கு ஒரு சிறு கருத்தரங்கும் நடத்தப்பட்டது. ஆனால் சரணடைய யாரும் வரவில்லை. அனைத்துக் கட்சிகளும் கலந்து செய்வதாக இருந்த நிகழ்ச்சி சில கட்சி உறுப்பினர்களது பங்கேற்போடு சுருங்கி விட்டது.

பழைய வாக்குறுதிகள் வெறும் மோசடியாகப் போனபின் சரணடைவதற்கான எந்த முயற்சியையும் ஆதரிக்க முடியாது" என முக்கிய கொள்ளையர் தலைவரான தாசில்தார்கிங் அறிவித்து விட்டார். இவர் 1972ல் நடந்த ஜெ.பி.யின் முயற்சியில் தொடர்பாளராய் இருந்தவர்

"சரணடைபவர் யாரையும் போலீசார் துன்புறுத்தக் கூடாது; தனி நீதி மன்றம் வைத்து விரைவாக வழக்குகளை முடிக்க வேண்டும்; ஆயுள் கைதிகளைத் திறந்தவெளி சிறையில் தான் வைக்க வேண்டும்; மரண தண்டனை யாருக்கும் கொடுக்கக் கூடாது; ஆயுதம் பெற்ற வழிமுறைகளை விசாரிக்கக் கூடாது; குடும்ப உறுப்பினர்களுக்குப் புனர் வாழ்வு வசதிகளை அரசு தாராளமாகச் செய்ய வேண்டும்"— என்பதே அவர்களது கோரிக்கைகள். அனைத்தும் 1972ல் ஒத்துக்கொள்ளப்பட்டவையே. ஆனால் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் காட்டப்படும் அசட்டை திருந்த விரும்புவோரைத் தூர விரட்டுகின்றது.

இதேபோல் கொள்ளைக்காரர்களது ராணி என சித்தரிக்கப் படும் பூலான்தேவியின் வாழ்க்கையும் நம் மனதை உலுக்கவே செய்கிறது. பிற்படுத்தப்பட்ட தன் இனம், உயர்ஜாதி தாக்கூரால் சீரழிக்கப்படுவது அவளது உள்ளத்தை வாட்டியது. உயர்ஜாதியினரால் கற்பழிக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்ட அவள் எரிமலையாகி விட்டாள் இது விடுதலை உணர்வின் வீச்சுத்தான். ஆனால் அது கொள்ளை முறைகளால் தான் சாத்தியம் என திசை மாறிப் போய் விட்டாள்.

கொள்ளைக்காரர்களின் சூழ்நிலையையும் நடவடிக்கைகளையும் சோதித்துப் பார்த்தால் அவர்கள் சில அரசியல் வாதிகளை விட நல்லவர்களாகவே இருப்பது தெரிகிறது.—சாமான்யன்

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# எமக்கு வந்தவை

**"குமுறும் நெஞ்சம்"**
மாத இதழ்
புனித சூசையப்பர்
கல்லூரி சாலை,
திருச்சி-620 002.
ஆண்டு சந்தா ரூ. 5/-

**"நிஜங்கள்"**
மாத இதழ்
253, கூடல் நகர்,
மதுரை-625 018.
ஆண்டு சந்தா ரூ 8-00

**"அறிவியக்கம்"**
மாத இதழ்
அறிவியக்கப் பேரவை
ஜி. எஸ். டி. ரோடு,
வண்டலூர், சென்னை-48.

**"நடம்"**
மாத இதழ்
6, அரவக்குறிச்சி ரோடு,
பாளையம், வேடசந்தூர்
வட்டம், மதுரை மாவட்டம்
ஆண்டு சந்தா ரூ. 8-00

**"விழிகள்"**
மாத இதழ்
185, மாதவன் சாலை,
க. க. நகர், திருச்சி-2.
ஆண்டு சந்தா ரூ 10-00

கவிதைத் தொகுப்பு
ஆசிரியர்: இளைய பாரதி
வி. ஆர். பப்ளிகேஷன்ஸ்
20, அய்யா முதலி தெரு,
ராயப்பேட்டை, சென்னை-14.
விலை ரூ. 5-00

**தூண்டிலிரை**
கவிதை நூல்
ஆசிரியர்: கன்னல் பன்னீர்
செல்வம், தமிழ்க் குடில்
மேலத்தெரு, 90, கடலங்குடி,
தஞ்சை மாவட்டம்-609 501.
விலை 60 காசு.





**'உழைக்கும் மக்கள்
இணைப்பு இயக்கம்'**
வேடசந்தூர் முதல்
மாநாட்டு மலர்
3, டாக்டர் வாசுதேவன் தெரு
சென்னை-600 010.

**ஆப்பிரிக்கா மகாத்மா
தான்சானியாவின்
தனித்தலைவர்
ஜூலியஸ் நியரெரெ**
ஆசிரியர்: அ. மேரி
அ.ம. வரப்பிரசாதம், சே.ச.,
ரூ. 4-50 கீழ்க்கண்ட முக-
வரிக்கு M.O. செய்தால்
கிடைக்கும்: குமுறும் நெஞ்சம்
புனித சூசையப்பர்
கல்லூரிச் சாலை,
திருச்சி-620 002.




★ இப்பகுதியில் இடம்பெற 2 பிரதிகள் அனுப்புக. தக்கவை தனியே விமர்சிக்கப்படும்.

# எந்த ஆசனம் செய்வது?

நம் முன்னோர்கள் கண்டுபிடித்தவற்றுள் இன்றைய விஞ்ஞானம் வியக்கும் அளவுக்கு முழுமையடைந்திருப்பது யோகாசன உடற்பயிற்சியே. யோகாசனங்கள் ஏராளமாக இருப்பதால் அவற்றுள் எதைச்செய்வது? எப்படிச்செய்வது என்பதே இன்றைய இளைஞர்களின் கேள்வி,

யோகாசனங்களில் உடலிலுள்ள எல்லா உறுப்புக்களுக்கும் நன்மை விளைவிக்ககூடிய ஆசனம் ஒன்றிருக்கிறது. அதுதான் சர்வாங்காசனம். உடம்பின் அகஉறுப்பு, புறஉறுப்புகளின் வளர்ச்சியும், தளர்ச்சியும், கழுத்தின் உள்ளே குரல்வளையின் இருபுறத்தும் ஒரு புளியங்கொட்டை அளவிருக்கும் ''தைராய்ட்'' என்னும் சுரப்பியிடம் இருக்கிறது என்று இன்றைய விஞ்ஞானம் கூறுகிறது.



இந்த தைராய்டு சுரப்பிக்கு உயிர் கொடுத்து சுறுசுறுப்பாக இயங்கச்செய்வது இந்த சர்வாங்காசனம்.

முதலில் முகம் மேலே பார்த்தவாறு கீழே படுக்கவேண்டும். பின்னர் முழங்கைகளைக் கீழே ஊன்றி உள்ளங்கைகளை இடுப்புக்குக் கீழே பொருத்திக் கால்களை மேலே உயர்த்தவேண்டும். முகம் பக்கமாகத் தள்ளப்பட்ட மார்பு மோவாய்க்கட்டையில் சென்று ஒரு பிணைப்பை (Chin Lock) ஏற்படுத்தவேண்டும். அப்போது எச்சிலை விழுங்கலாகாது. மூச்சையும் கட்டக்கூடாது. இப்படிக்கொஞ்ச நேரம் நிறுத்தி மெதுவாகக்கலைக்க வேண்டும். உணவு உண்பதற்கு முன்பு மட்டுமே இதனைச்செய்ய வேண்டும்.

இந்த சர்வாங்காசனம் ஒன்றே போதுமானது உடலை நல்ல நிலையில் வைக்க. நாளை காலையே செய்து பாருங்கள், விடாமல் தினம் செய்யுங்கள்.

— சுட்டி பாரதி



நுகர்வோர் குரல்

# புகார் செய்யுங்கள்



இந்தியாவில், சிறப்பாக தமிழகத்தில், இன்னும் சிறப்பாக சென்னையில் மக்களிடம் அநீதிகளைத் தட்டிக் கேட்கும் மனோபாவம் இல்லை. இதுவே பல நிர்வாக ஊழல்களை ஊட்டி வளர்க்கிறது.

அஞ்சல் நிலையத்தில், வங்கிகளில், பேருந்து நிலையங்களில் புகைவண்டி நிலையங்களில், மருத்துவ மனைகளில், கூட்டுறவு அங்காடிகளில் கட்டாயமாக புகார் புத்தகமோ அல்லது புகார் செய்யும் வசதியோ செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்படி புகார் செய்யலாம் என்பது பலபேருக்குத் தெரியாது. தெரிந்தாலும் இதிலெல்லாம் என்ன பயன் என்று அவநம்பிக்கை கொள்கிறார்கள். இதனால் புகார் புத்தகத்தின் பக்கங்கள் வெள்ளையாகவே உள்ளன. புகார் போடும் பெட்டிகள் துருப்பிடித்து, உள்ளே கரப்பான் வாழ்கிறது.

அஞ்சல் நிலையத்தில் நீங்கள் அநாகரிகமாக நடத்தப்படும் போது, புகைவண்டி நிலயத்தில் பச்சையாக மோசடிக்கு உட்படுத்தப்படும்போது நேராக சென்று தலைமை அதிகாரியிடம் புகார் புத்தகத்தைக் கேளுங்கள். கேட்டாலேயே அவர் முகம் மாறும். நீங்கள் சிறப்பாக கவனிக்கப் படுவீர்கள். வித்தியாசமான ஆள் என்று உங்களைச் சமாளிக்க ஏதோ செய்யப்பார்ப்பார்கள். தைரியமாக புகார் எழுதுங்கள். ஓரளவாவது பயன் இல்லாமல் போகாது.

உங்களைப் போல பலரும் செய்ய ஆரம்பித்தால், அலுவலர்கள் கொஞ்சம் விழித்துக் கொள்வார்கள். அடுத்த முறை உங்களுக்குப் பொது விடங்களில் நீதி கிடைக்காத போது ''சார் புகார் புத்தகம் இருக்கிறதா!'' என்று கேட்டுத்தான் பாருங்களேன்!

— ஸ்டெனிஸ்லாஸ்.



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# Madras Motor Finance & Guarantee Company Limited

**45, Armenian Street,**

**MADRAS-600 001.**

**PHONE : 21138.**

*HIRE PURCHASE FINANCIERS*
*A TRUSTED PLACE FOR*
*FINANCIAL DEALINGS.*


ஓட்டல் தொழிலாளர்கள் தமிழகத்தில் மட்டும் 2,50,000 பேர் இருக்கிறார்கள். மிகக் குறைந்த ஊதியத்தில் இவர்களின் குறைந்த பட்ச வேலை நேரம் 12 மணி. உலகிலேயே அதிக தூரம் நடப்பவர்கள் இந்த ஓட்டல் தொழிலாளிகளே.

1958 ஆம் ஆண்டு வந்த சட்டம் இன்னும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. ஓட்டல் முதலாளிகளின் எந்த அநீதியையும் கேட்பாரில்லை.

ஓட்டல் இருக்கும் இடம் நிரந்தரம், அடுப்பு நிரந்தரம் கேவலம் இட்லி பானைக்கு உபயோகப்படுத்தும் அந்த வெள்ளைத்துணிக்குக்கூட குறைந்த பட்சம் 6 மாத உத்திரவாதம் உண்டு. ஆனால் இவர்களில் பலரின் வேலை எந்த நேரமும் பறிக்கப்படும் படு தற்காலிக நிலை.

ஏதாவது சிறு தவறு செய்தால் கூட தொழிலாளர்களை அடிப்பது ஓட்டல் முதலாளிகளின் வாடிக்கை. சாப்பிட வந்தவர் சட்னியை மீதம் வைத்துவிட்டுப் போனால் கூட ஏன் இவ்வளவு வைத்தாய் என்று சர்வரை உதைக்கின்ற இடங்கள் உண்டு.

20 பேருக்குமேல் வேலை செய்யும் ஓட்டல்களில் 60 நாளுக்குமேல் வேலை செய்தாலும் பிராவிடன்ட் பண்டு தரவேண்டும். அதற்காகவே 59 நாட்களுக்குமேல் வேலையில் வைக்காமல் விரட்டிவிடுகிறார்கள். கிராமத்திலிருந்து சாரிசாரியாக வேலை தேடி வரும் பையன்களைப் பிடித்தனுப்பத்தான் காண்ட்ராக்டர்கள் இருக்கிறார்களே. 59 நாட்களுக்குப் பின் பையனை காண்ட்ராக்டர் வேறு இடத்துக்குத் தள்ளி விடுவார்; இரு வேளை சாப்பாட்டுடன் தினக் கூலி ரூ. 5/- தான் அதிகபட்சம்.

# ஓட்டல் தொழிலாளிகள்

வருவோர்க்குச் சுவையான உணவு படைக்கும் இவர்களுக்கோ, முன்னுந்தரமான சுகாதாரமற்ற கலப்பட உணவு பண்டங்கள் தரப்படுகின்றன. திடீர் கூட்டங்கள் வந்து விட்டால் அதையும் தியாகம் செய்ய வேண்டும். தன் கண்ணெதிரேயே அருவருப்பாகத் தயாராகும் பண்டங்களை மாடுகளைப் போல, கக்கூசுக்குப் பக்கத்தில் சாப்பிட வேண்டியநிலை. எனவே உணவு ஈட்டுத்தொகை வழங்குமாறு கேட்கப்பட்டன. சில இடங்களில் இப்படித் தரும் ஈட்டுத்தொகை ஒரு மாதத்திற்கு ஒரு வேளை காப்பி குடிக்கக்கூட போதாதது.

இவர்களின் சங்கத்தினர் 5 முறை மாண்பு மிகு முதலமைச்சரைப் பார்க்க படையெடுத்தும் காட்சி தரவில்லையாம். ஓட்டல்களிலிருந்து மிகப் பெரும் அளவில் வரி வசூலிக்கும் அரசுக்கு, அந்த ஓட்டலில் தொழில் புரியும் தொழிலாளியின் நல்வாழ்விற்கு உறுதி அளிப்பது ஒரு தார்மீகக் கடமையாகப் படவேயில்லை.

ஓட்டல் தொழிலாளர்கள், பிரச்சனையின் அழுத்தத்தால் சில அடிப்படைக் கோரிக்கைகளை முன் வைத்து ஒன்றுபட்டிருக்கிறார்கள். தற்காலிக, நிரந்தர ஓட்டல் தொழிலாளர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு மேலும் தங்கள் ஒற்றுமையைப் பலப்படுத்தினாலன்றி இவர்கள் பிரச்சனையை அரசு திரும்பிப்பார்க்காது.

—பாஸ்கரன், எழில்.



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# டில்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டி

பாரதத்தை இன்று பல பிரச்சனைகள் சூழ்ந்து கொண்டிருக்கும் போது அரசு அடுத்த ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான முயற்சிகளை நமக்கு அச்சாரமாக்கியிருக்கிறது. பிரம்மாண்டமான முறையில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் அரசு வீரயமாக்கப் போகும் பணத்தின் விபரம் வருமாறு:— 8 ஆயிரம் பேர் அமரக் கூடியனவாய் கட்டப்படவிருக்கும் குளிர்பதன வசதி செய்யப்பட்ட உள்புற நீச்சல் குள அரங்கம் கிட்டத்தட்ட 15 கோடிகளைச் சாப்பிடப் போகிறது. விளையாட்டுப் போட்டிகளைக் காண வரும் வெளி நாட்டினர் மற்றும் ஏனையோருக்காக நிர்மாணிக்கப்படவிருக்கும் குடியிருப்புகளுக்குச் சுமார் 35 கோடி செலவிடப்படுகிறது. 75,000 பேர் அமர வசதியாக பிரதான அரங்கம் எழுப்பப்படுகிறது. இது விழுங்கப் போகும் தொகை 30 கோடி.

இது தவிர மின்சார வசதிக்காக, மேம்பாலச் செலவுகளுக்காக ஐந்து நட்சத்திர ஓட்டல்களுக்காக சுமார் 210 கோடி ரூபாய் அரசு செலவழிக்கத் திட்டமிட்டிருப்பதாக விளையாட்டுக் குழுத் தலைவர் அறிக்கை விட்டிருக்கிறார். இரயில்வே செய்து தரும் வசதிகள், அதனால், ஏற்படக் கூடிய செலவுகள் இன்னும் கணக்கிடப்படவில்லை. காவல் துறையினருக்கும், குடிநீர் வசதிக்காகவும், சாலையை விரிவுபடுத்துவதற்கும், மற்றும் பல செலவுகளுக்கும் மொத்தமாக செலவழிக்கப்படவிருக்கும் கோடிகள் எவ்வளவு என்று இன்னும் கணக்கிடப்படவில்லை.

டில்லியில் உள்ள குடிசைகளை ஒழிக்க இன்றும் குடிசை மாற்று வாரிய அமைப்புக் கூட இல்லாத நிலையில் இவ்வளவு செலவு செய்து விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டுமென்று யார் அழுதார்கள்! ஆசிய விளையாட்டுப் போட்டிகளை எதிர்த்து எழுதப்பட்டதல்ல இக்கட்டுரை. ஏழ்மையான பாரதம் இவற்றைத் தாங்குமா என்பது தான் கேள்வி?

—சுவிசா சிசுபாரன்.





# பாரதியார் எழுதுகிறார்

(பாரதியார் இன்றில்லா-விட்டாலும் அவரது எழுத்துக்கள் இன்றும் உயிரோடு, வாழ்கின்றன. அன்று அவர் பத்திரிகைகளில் எழுதியது இன்றும் உண்மைதான். அவற்றில் சிலவற்றைத் தருகிறோம்.)

பிச்சைக்காரன் வந்தால் "ஏண்டா தடிபோலிருக்கிறாயே! பிச்சை கேட்க ஏன் வந்தாய்? உழைத்து ஜீவனம் பண்ணு" என்று வைது துரத்துவார்கள். உழைக்கத் தயாராக இருந்தாலும், வேலையகப்படாமல் எத்தனை லக்ஷலக்ஷம் பேர் கஷ்டப்படுகிறார்கள் என்ற விஷயம் மேற்படி நாகரிக வேட்டை நாய்களுக்குத் தெரியாது.

சோம்பேறி! பிச்சைக்காரன் மாத்திரம் தானா சோம்பேறி! பணம் வைத்துக்கொண்டு வயிறு நிறையத் தின்று தின்று யாதொரு தொழிலும் செய்யாமல் தூங்குவோரை நாம் சீர்திருத்திவிட்டு அதன் பிறகு ஏழைச்சோம்பேறிகளைச் சீர்திருத்தப் போவது விசேஷம். பொறாமையும், தன் வயிறு நிரப்பிப் பிற வயிற்றைக் கவனியாதிருத்தலும், திருட்டும், கொள்ளையும் அதிகாரமுடையவர்களும் பணக்காரர்களும் அதிகமாகச் செய்கிறார்கள். ஏழைகள் செய்யும் அநியாயம் குறைவு. செல்வர் செய்யும் அநியாயம் அதிகம். இதைக் கருதியே ப்ரூதோம் என்ற பிரெஞ்சு தேசத்து வித்துவான் "உடைமையாவது களவு" என்றார்.

ஏழைகளே இல்லாமற் செய்வது உசிதம். ஒரு வயிற்று ஜீவனத்துக்கு வழியில்லாமல் யாருமே இருக்கலாகாது. அறிவுடையவர்கள் இப்போது பெரும்பாலும் அந்த அறிவை ஏழைகளை நசுக்குவதிலும் கொள்ளையிடுவதிலும் உபயோகப் படுத்துகிறார்கள்.

உலகத்துச் செல்வர் சகல ஜனங்களுக்கும் பொதுவாகிய பூமியைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டு பெரும் பகுதியார் சோறின்றி மாளும்படி விடுகிறார்கள். ஏழைகளைக் காப்பாற்ற வேண்டாமா என்று கேட்டால், 'அவர்களுடைய கர்மத்தினால் அவர்கள் ஏழையாயிருக்கிறார்கள். அதற்கு நாங்களா பொறுப்பு? நாங்களென்ன ஏழைகளுக்குக் காவலாளிகளா?' என்று கேட்கிறார்கள். உலகம் மாறுகிறது. ஏழைகளுக்கு நியாயம் செய்ய வேண்டும்.



FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

# கீரைக்காரிகளிடம் பேரம்



— நமது வாசல்களுக்கு வந்து தினம் தினம் பிழைப்பு நடத்தும் கீரைக்காரிகள் ஒரு கட்டு கீரை 25 காசு என்பார்கள். நமது தாய்மார்கள் காலை நேரத்தில் அவர்களோடு மல்லுக்கட்டி நின்று 15 காசுக்கு பேரம் பேசி கடைசியாக 20 காசு கொடுத்து வாங்குவார்கள். (20% விலை குறைப்பு!) சிலர் கடன் சொல்வதும் உண்டு. 1 மாசம் இழுத்தடிப்பதும் உண்டு.

இப்படி 5 பைசாவாவது விலை குறைத்து வாங்காவிட்டால் மண்டை உடையும் நம் வீட்டுப் பெண்களுக்கு. பாவம் ஒரு கீரைக்காரி நாள் முழுவதும் [illegible] அல்லாடி வீடு வீடாக கீரை [illegible] விற்று விற்றாலும் ஒரு நாளைக்கு ரு 10 அல்லது ரு 15க்கு[illegible] விடமுடியாது. இதில் பாதிகூட லாபம் வருமோ என்னவோ! இலவசமாக அத்தனை கீரையையும் யாரோ தந்திருந்தால் கூட ஒரு நாளைக்கு 15 ரூபாய்க்குமேல் அவளால் பார்க்க முடியுமா?

இப்படி எளியவர்களிடம் 5, 10 காசுகள் அடித்து மிச்சம் பிடிக்கும் நாம் குமரன் சில்க்ஸ், நல்லி, சாரதா போன்ற குபேர புடவை கடைகளில் ரூ. 1000/-க்குப் புடவை வாங்கிவிட்டு 1 ரூபாய் குறைக்க தலைகீழாக நின்றாலும் (அதாவது .1%) சரியான விலை தான் போட்டிருக்கிறோம் என்று பையில் போட்டு கையில் தருவார்கள். பளிச்சென்று கறார்விலை-கடன் இல்லை என்ற போர்டுகள்.

பாவம் ஏழைக் கீரைக்காரி 5 காசு சாப்பிட்டு விட்டுப் போகட்டுமே என்று விட்டு விட மனசு வராத நாம் இந்த குபேரர்களிடம் கேட்டதை அப்படியே கொட்டிக் கொடுத்து விட்டு பல்லைக் கர்ட்டிக்கொண்டு வெளி-யேறுவோம்.

— ஸ்டெனிஸ்லாஸ்.

ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பொ. இரத்தினம், 17, க்ஜபதி தெரு, சென்னை-30; அச்சிடுவோர் : J. S. கிட்ராஜ் ஷா, இருஷா பிரிண்டர்ஸ், 35, லப்பை தெரு, சென்னை.2.


# Our Outstanding Publications

| Name Of The Book | Name Of The Author |
|---|---|
| Offfice Management | Chopra, R K. |
| A Study of Managerial Economics | Gopalakrishna, D. |
| Financial Management | Kulkarni, P.V. |
| Personnel Management (Management of Human Resources) | Mamoria, C B. |
| Dynamic Personnel Administration (Managemenf of Human Resources) | Rudrabasavaraj, M.N. |
| Modern Business Organisation and management | Sherlekar, S.A. |
| Modern Marketing (Principles & Practice) | Sherlekar, S.A. |
| Marketing Management | Sherlekar, S A. |
| Principles of Business Management. | Sherlekar, S.A. |
| Management Principles and Practice. | Srinivasan and Chunawala |

ADDRESS :

**HIMALAYA PUBLISHING HOUSE**

"Ram Doot" Dr. Bhalerao Marg
Girgaon, Bombay-400 004.


FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010

கட்டு: மாத இதழ் 15, ஜூன் 1981 Regd. No. TN/MS(N)/317
Licenced to post without prepayment Licence No: TN/MS(N)WPP-56

*With best compliments*

(-✧-)

Inter Continental Enterprises

1855/ Nov 2010

http ://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழகம்

Kasturi Ranga Iyengar Road,
MADRAS-600 018.

FREE E Books - www.thamizham.net - TM 1855 / Nov 2010